International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# புறநானூற்றில் பாடலில் பெண் கலைஞர்கள்

**ப. பானுச்சந்தர்**
முனைவர் பட்ட ஆய்வாளர், சுழல் எண்: 2225120004

**முனைவர் ஜா. இராஜா**
உதவிப்பேராசிரியர்
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

**ஆய்வு நோக்கம்**

சங்க இலக்கியங்கள் கலைகளை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றியது. சங்கப் பாடல்களில் கலை சார்ந்த செய்திகளும், கலைஞர்களின் வாழ்வியலுமே அதிகமாக இடம்பெற்றுள்ளதை பாடல்களின் வழி காண முடிகிறது. சங்க இலக்கியங்களில் தமிழர்களின் வாழ்வியல் கருவூலமாக கருதப்படும் புறநானூறு எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். கலையை தங்கள் வாழ்வியலின் மேம்பாடாக கருதிய தமிழ் சமூகம் அதனை வளர்த்தெடுக்கும் விதத்தில் ஆண், பெண் என இரு தரப்பு கலைஞர்களும் இருந்துள்ளதை சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்துரைக்கிறது. பாலின பாகுபாடுகள் ஏதுமின்றி வளர்ந்த தமிழ் சமூகத்தில் பெண்கள் தங்களின் கலைகளை இலக்கியங்கள் வழி மேம்படுத்தியுள்ளதை அவர்களின் படைப்புகள் நமக்கு பறைச் சாற்றுகின்றன. கலைகளை திறன் சார்ந்த கலைஞர்கள், தொழில் முறை கலைஞர் என இரு பெரும் கலைப் பிரிவுகளிலும் பெண்கள் இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் காட்டுகிறது. அவ்வாறு புறநானூற்றுப் பாடலில் பெண் கலைஞர்கள் தங்களின் கலைத்திறன்களை படைப்புகளின் மூலம் எவ்வாறெல்லாம் மேன்மை அடையச் செய்துள்ளனர் என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

பழந்தமிழர்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் இலக்கிய சான்றுகளாக விளங்குவது எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகும். அதில் எட்டுத்தொகை நூல்கள் ஒன்று புறநானூறு. பழந்தமிழர்களின் வீரம், கொடை, சிறப்பு மற்றும் ஒழுக்கலாறுகள் என பல சிறப்புகளை தன்னகத்தேக் கொண்ட இலக்கிய கருவூலமாகத் திகழ்கிறது. சங்க கால மக்களின் கலை,பண்பாடு,நாகரிகம் போன்றவற்றில் தலை சிறந்தவர்களாக புகழ்பெற்று இருந்தனர். கலை மட்டுமின்றி கலை சார்ந்த வாழ்வியலில் உலக நாகரிகங்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தனர். பாலின பாகுபாடு இன்றி ஆண்,பெண் என இருவரும் கலைகளை வளர்த்தெடுத்ததை இலக்கியங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன. அவ்வாறு புறநானூற்றுப் பாடல்களில் ஆண்களுக்கு இணையாக பெண் கலைஞர்கள் எவ்வாறு எல்லாம் தங்களின் திறன்களை வெளிப்படுத்தி தமிழ் கலைகளை மேன்மை அடைய செய்தனர் என்பதே ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முதன்மைச் சொற்கள்** : கலைச் சொல் விளக்கம், பெண் கலைகர்கள், புறநானூற்றில் பாடினி, விறலியர், சமூக நிலையில் பெண் கலைஞர்கள்.

**கலைச் சொல் விளக்கம்**

கலை என்னும் சொல் மனதை வசப்படுத்தக் கூடியதும், நிகழ்கின்றவனையும், பார்வையாளனையும் ஒரே உணர்வுக்குள் ஆட்படுத்தக் கூடிய கூறுகளை உடையது. **'கலை என்னும் சொல் கல்**

**என்னும் வேர்ச் சொல்லில் இருந்து தோன்றிய தாகும்'[1] (பிங்கல நிகண்டு)**

கலை என்னும் சொல் "கலா" என்னும் வடமொழி சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது என கு.வே பாலசுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்.

கலை என்பதற்கு திறன் பொருள்கலையினை மனத்திறத்தில் வெளிப்பாடு என்று சிலம்பு குறிக்கின்றது. மனதிலிருந்து புறப்படும் கலைகள் கண்கலால் கண்டும், காதால் கேட்டும் இன்பம் தரக்கடியவை. அதுவே மனமகிழ்ச்சியும் இன்பத்தையும் கலை உணர்வின் வழியாக நமக்கு வெளிப்படுத்துகிறது.

**"கலை என்னும் சொல் கல் என்னும் ஏவற் பகுதியிலிருந்து தோன்றியதாகும். கல்வி என்னும் சொல்லுக்கும் இதுவே முதனிலையாகும். கலை என்னும் சொல், மானின் ஒரு வகையினையும் ஆண்குரங்கினையும் குறிப்பதாகத் தொல்காப்பி யம் காட்டுகின்றது சங்க இலக்கியங்களாகிய, எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் இச்சொல் பெரும்பாலும் கலைமானைக் குறிப்பதாகவே அமைகிறது. ஆடல், பாடல், ஓவியம், சிற்பம், கட்டிடம் ஆகிய பல்வேறு கலைகளின் தேர்ச்சி குறித்தும், கலைவாணர் குறித்தும் பல செய்திகளை வழங்கும் சங்க இலக்கியங்களில் கலை என்ற சொல் காணப்படவில்லை என்பது வியப்புக்குரிய ஒன்றாகும்"[2]** (சங்க இலக்கியத்தில் கலையும் கலை கோட்பாடும் ப.எ.19)

கலை என்பதற்கு சங்க இலக்கியங்களில் பெரியதாக விளக்கங்கள் தரப்படவில்லை. ஆனால் கலைகள் பற்றிய விளக்கங்கள் பெரும்பாலும் தரப்பட்டு இருக்கிறது. கலை மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு உன்னத படைப்பாக்கமாக இருக்கிறது.

**"கற்பனை, அழகு, இன்பம் காதல் ஆகியவை கலைகளின் அடிப்படைத் தன்மைகள்"[3]** (சங்ககால மகளிர் வாழ்வியல் முனைவர் மு. திலகவதி)

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பி யத்தில் கலைஞர்களைப் பற்றிய தனி வரையறையை கூறியுள்ளது.

**'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற**
**பெருவளம் பெறாஅர்க்கு அறிவுற்குச்**

**சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்'[4]**
**தொல்** (பொரு: புறம்) நூ.எண்:30

**கலைஞர்கள்**

பண்டைய தமிழ் சமூகத்தில் கலைகளில் சிறந்து விளங்கியவர்களை கலைஞர்கள் என்னும் பெயரால் அழைத்தனர். அவர்கள் கூத்து பன் இசைத்தல் புலவர் என பலவாறு புகழப்பட்டனர். போர்க்களம் பாடுவோர் ஏர்களம் பாடுவோர் என இருபெரும் நிலையில் கலைஞர்கள் திகழ்ந்தனர். போரில் வென்ற மன்னர்களை அவனுடைய புகழையும், சிறப்பினையும், வீரத்தையும் பாடி பரிசில் பெறுபவர் பாணர் என்று அழைக்கப் பட்டனர்.

புறம் சார்ந்த செய்திகளை மட்டும் பாடுபவர் களாக கலைஞர்கள் இல்லை. அதனை விடுத்து அறம் சார்ந்த அக வாழ்வியலையும் பாடும் நிலையில் கலைஞர்கள் இருந்துள்ளனர் என்பதனை தொல்காப்பியர் தனது நூற்பாவில் கூறும் பொழுது,

**"தோழி தாயே பார்ப்பான் பாங்கன். பாணன் பாடினி இளையர் விருந்தினர். கத்தர் விறலியர் அறிவர் கண்டோர் யார்த்த சிறப்பின் வாயில்கள் என்ப"[5]** (தொல். பொ (கற்பு) நூ.எண்:52)

என்னும் நூற்பாவில் அகத்தைப் பாடிய கலைஞர் களைப் பற்றிய செய்தி எடுத்துரைக்கப் பட்டுள்ளது. அகவாழ்க்கைக்குத் தகுந்த அன்பால் பிணைக்கப்பட்ட சிறப்பினை வாயிலா ராக அமைந்துள்ளனர். தலைவன், தலைவி ஊடலில் வாயிலார்களாக பாணன், பாடினி, கூத்தர் விறலியர் போன்றோர் முக்கிய பங்காற்றுகின்றனர்.

**பெண் கலைகர்கள்**

புறநானூற்றில் வெளிப்படும் புலவர்களில் பெண்பார் புலவர்கள் ஆக திகழ்ந்தவர்கள் ஔவையார், நாகையார், பொன்முடியார், காக்கை பாடினியார், போன்றவர்கள் ஆவர். கலைகளை வாழ்வியல் முறையாக கொண்டவர்களும், தொழில்முறையாக கொண்டவர்களும் இரு தரப்பாக இருந்தனர். இவற்றில் பெண்பாற் கவிஞர்கள் ஒருவகை கலைஞர்களாகவே கருதப் பட்டனர். அவர்கள் மட்டுமின்றி பல பெண் கலைஞர்கள் இருந்தனர். விறலி மற்றும் பாடினி என்று அழைக்கப்பட்ட இசைக் கலைஞர் களும் தங்கள் கலைத்திறத்தால் சங்க காலத்தில் பெரிதும் புகழப்பட்டிருந்தனர் என்பதை காண முடிகிறது.

சங்ககாலம் தொட்டே ஆண்களும், பெண்களும், சம உரிமையைக் கொண்டு பாலின சமத்துவத் தோடு சமூகத்தில் வாழ்ந்து வந்தனர். இடைக் காலத்தில் பெண்களின் உரிமையை பறிக்கப்பட்டு இருந்தாலும், தற்காலப் பெண்கள் முழு உரிமை யும் பெற்று வாழ்கின்றனர்.

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**

**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.**

**எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி"[6]**

என்ற வரிகளில் மாகவி பாரதி பெண்களின் ஆளுமையினை கூறியுள்ளார். ஆண்பாற்

கலைஞர்களுக்கு இணையாக பெண்பாற் கலைஞர்களும் சங்க காலத்தில் இருந்துள்ளனர். அவர்களை ஆண் பெண் பேதமின்றி சரிசமமாக நடத்தினர் என்பதை மதுரை காஞ்சியில்,

**"பாணர் வருக பாடினியர் வருக"[7]**
(மதுரைக்காஞ்சி-749)

என்ற வரியில் வரவேற்கும் வாயிலிடத்தே பாணரையும், பாடினியரையும் வருக என இருவருக்கும் யானைகளை பரிசாக அளித்தனர் என்றும் காணமுடிகிறது. இதன் மூலம் சங்க காலங்களில் ஆண் பெண் என இருவரும் சமமாக பார்க்கப்பட்டதை உணர முடிகிறது.

**புறநானூற்றில் பாடினி**

பெண் கலைகர்களுள் ஒருவரான பாடினி ஓர் ஆற்றுப்படை வகையைச் சார்ந்தவள். மன்னனின் சிறப்பையும், வீரம் மிக்க அவன் செயலையும், வள்ளல் தன்மையையும், தன் நாவன்மையால் எடுத்துரைத்து, அவனது திறத்தை பாடல் வழி கூறி பல பரிசுகளை பெற்று சிறப்பு ஓங்கி இருந்தால் என்பதனை புறநானூற்று பாடல் எடுத்துரைக்கிறது,

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கும், படை வீரர்களுக்கும் அறிவுரை வழங்கும் விதமாக உன் பகைவர், ஒளிரும் படைக்கலங்களுடன் கூடிய உன்னுடைய விரைந்து செல்லும் தூசிப்படையின் வலிமையை அழிக்க விரும்பி ஆசையோடு போருக்கு வந்த னர். பின்னர், அந்த ஆசை ஒழிந்து பழியுடன் வாழ்ந்தவர் பலரா? அல்லது குற்றமற்ற நல்ல நூலாகிய வேதத்தில் சொல்லியவாறு அரிய புகழுடைய சுள்ளியும், பொரியும், நெய்யும் இட்டுப் பலவிதமான மாட்சிமைகளும், கேடற்ற சிறப்பும் உடைய யாகங்கள் செய்து, நீ நிறுவிய தூண்கள் நடப்பட்ட அகன்ற வேள்விச்சாலை களின் எண்ணிக்கை அதிகமா? வாரால் இறுகக் கட்டி, மார்ச்சுனை தடவிய முழவுடன் உன் படையெடுப்புகளைப் புகழ்ந்து பாடும் பாடினியின் பாட்டுக்கேற்ப ஆராய்ந்து அமைந்த வலிமை உடையோய்! இவற்றுள் எதன் எண்ணிக்கை அதிகம் என்பதை,

**"நிழல்படு நெடுவேல் ஏந்தி ஒன்னார்**
**ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்**
**நசைதர வந்தோர் நசைபிறக்கு ஒழிய**
**வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்**
**நற்பனுவல் நால்வேதத்து**
**அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை**
**நெய்ம் மலி ஆவுதி பொங்கப் பன்மாண்**
**வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி**
**யூபம் நட்ட வியன்களம் பலகொல்?**
**யாபல கொல்லோ? பெரும! வார் உற்று**
**விசிபிணிக் கொண்ட மண்கனை முழவின்**
**பாடினி பாடும் வஞ்சிக்கு**
**நாடல் சான்ற மைந்தினோய்! நினக்கே"[8]** (புறம் பா.எ.15. 13-25)

என்ற வரிகளில் நான்கு வேதங்களுக்கு இணையாக வஞ்சிப் பாட்டும் இருந்துள்ளதை அறிய முடிகிறது. வேதங்கள் பண்டைய சமூகத்தில் உயர்வாக பார்க்கப்பட்டது அதற்கு இணையாக பாடினி பாடும் வஞ்சிப் பாட்டை பொருத்தி காட்டி மன்னனின் வலிமைக்கு உதாரணப்படுத்தியுள்ளது சிறப்புக்குரியதாக இருக்கிறது. இதன் மூலம் வேதங்களுக்கும் இணையாக வஞ்சிப்பாட்டை ஒப்புமை படுத்தும் உயர்நிலையில் பாணினியின் பாட்டுத் திறம் இருந்துள்ளதை நன்கு அறிய முடிகிறது. இதனைப் போலவே,

**"மின்னிழை விறலியர் நின் மறம் பாட"[9]**
(பதிற்று:54 (6))

என்ற வரிகளில் தேன்பாயும் மலர்க் கூந்தலு டைய விறலியரும் அரசரின் வீரத்தைப் புகழ்ந்து பாட நன்கலன்கள் பலவற்றை வாரி வழங்குவான் என்று செய்தி இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. இதுபோல மன்னர்களின் புகழை பாடி தனது கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் பெண்கலைஞர்கள் தங்களுக்கான பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**பாடினியியின் வருணனை**

சங்க இலக்கியப் புலவர்கள் இயற்கை சார்ந்த பாடல்களை தனது வர்ணனையின் மூலமே வெளிப்படுத்துவர். அதுபோல மன்னர்களின் வீரம், கொடை, சிறப்பு என அனைத்தையுமே தனது வர்ணனை தன்மையின் மூலம் வெளிக்காட்டுவர். புகழ் பெற்ற வஞ்சி நகர வேந்தன். இந்த வஞ்சி தண்பொருநை ஆறு பாயும் நகரம். வானளாவிய புகழும் வெற்றியும் உடைய நகரம். இந்தப் பொருநை ஆற்று மணலில் பாவை செய்து பூப் பறித்துவந்து சூட்டி மகளிர் விளையாடுவர். இவர்கள் மென்மையான மயிர் கொண்ட தம் திரண்ட கைகளையும், வெண்ணிற இழையணியும் கொண்டவர்கள். பாவைக்குப் பூச்சூட்டிய பின்னர் பொருநை ஆற்றுப் புனல்நீரில் பாய்ந்து விளையாடுவர். இவன் விரும்பிய கோட்டைக ளையெல்லாம் வென்றவன். வலிமை மிக்க பெரியவர்களைப் புறங்கண்டவன். இவ்வாறு இவன் புறங்கண்ட வீரச் செருக்கைப் பாடினாள் ஒரு பாடினி. அதற்காக இவன் கழஞ்சு நிறைக்கு மிகுதியாக ஏரழகும், சீர்சிறப்பும் உடைய

அணிகலன்களைப் பாடினிக்குப் பரிசாக வழங்கினான். பாடிய பாடினிக்கு உடன்-குரல் கொளைப்பண் தந்த பாணனுக்கு வெள்ளி-நாரால் தொடுத்த தங்கத் தாமரைப் பூவைப் பரிசாக வழங்கினான். என்பதை,

**“புறம் பொற்ற வய வேந்தன் மறம் பாடிய பாடினி யும்மே, ஏர் உடைய விழுக் கழஞ்சின், சீர் உடைய இழைபெற்றிசினே! இழை பெற்ற பாடினிக்குக் குரல் புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே. என ஆங்கு, ஒள்அழல் புரிந்த தாமரை வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே.”**[10]

(புறம்- 42:11 (10-15)

என்ற வரிகளில் வலிய அரசனின் வீரத்தைப் புகழ்ந்துயும், பாடினியின் அழகும், சிறப்பும் கொண்டவள் என்று புகழ்ந்துள்ளனர். அவள் கடிஞ்சுகளால் செய்த நல்ல அணிகலனைப் பெற்றுக் திகழ்ந்தாள். இதுபோன்று இதுபோன்று தனது பாடல்கள் மூலம் தனது பாடல்கள் மூலம் பல பரிசுகளை பாடி நீ பெற்றுள்ளார் என்பது புலப்படுகிறது.

பாடினியின் சிறப்பை வெளிப்படுத்தும் மற்றொரு பாடலாக, பதிற்றுப்பத்தில் உடலில் அணிகலன் கள் (இழை). காதில் குழை. கழுத்தில் குளுமையான மாலை. முன்கையில் ஒளிவீசும் வளையல். மார்பில் திறம்படச் செய்த திருமணி. தலைக் கூந்தலில் புனைமுடி. பூச்சூடியதால் வண்டுகள் மொய்க்கும் முடி. இப்படித் தோன்றும் மகளிர் யாழிசை கூட்டிப் பாடினர். பேரியாழ் இசைக்கருவியில் பண்ணைத் தொடுத்து, பாலைப் பண்ணால் பாடினர். யாருக்கும் பணியாமல் உழிஞைப் போர் செய்து செங்குட்டுவன் கண்ட வெற்றிகளைப் பாடினர். கேட்டு மகிழ்ந்த செங்குட்டுவன் அவர்கள் மகிழும்படிப் பொருள் களை வழங்கினான். அதனை,

**“இழையர் குழையர் நறுந்தண் மாலையர் சுயர்நிமிர் அவிர்வதாடி செறித்த முன்கைத் திறல்விடு திருமணி இலங்கு மார்பின் வண்டுபடு துந்தல் முடிபுனை மகளிர் தொபைடு பேரியாழ் மாலை பண்ணிப்”**[11] (பதிற்று: 46 (1-5)

என்ற வரிகளில் வண்டின் நிறம் ஒத்த மயக்கம் கூந்தலை உடையவள் அப்பாடினி மகளீர் என்று புகழ்ந்துள்ளனர். மேலும் அவள் நறுமணங்கள் கொண்ட குளிர்ந்த மாலைகளை அணிந்துள்ளாள். கையில் ஒளிமிக்க வளையல்களின் அணிந்து உழிஞைத் தினையைப் போற்றிப் பாடுவர், என அவளின் கலை திறனை இப்பாடல் எடுத்து உரைக்கிறது.

### விறலியர்

விறலி என்பவள் உள்ளுணர்வையும், அழகு உணர்ச்சிகளையும் பாட்டின் வரிகளுக்கு ஏற்றவாறு ஆடுவாள். “விறல்பட ஆடும் பெண் விறலி” என வழங்கப் பெற்றான். விரலியர்கள் தங்கள் தேர்வுகளால் பல மன்னர்களின் புகழ் களை பாடி அதற்காக பரிசுகளை பெற்றுள்ளனர். அதனை பதிற்றுப்பத்தில் விரலி ஒருவர் சேர மன்னனை புகழ்ந்து பாடி பல்வேறு பரிசுகளை பெற்றார் என்ற செய்தியை காக்கை பாடினியார் தனது பாடலில் கூறும் பொழுது,

**“ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்”**[12]

(பதிற்.ப.58:1)

என்றழைக்கிறார். மேலும் குமட்டூர் கண்ணனார் பதிற்றுப்பத்தில் விறலியரை அழைக்கும் வகையை,

**“ஏந்துகோட் அல்குல் முகிழ்நகை மடவரல்**

**கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே”**[13]

(பதிற்.ப.18: 4-5)

என்னும் வரிகளில் விறலியர்களின் திறன்களை எடுத்துரைக்கிறார். புறநானூற்றுப் பாடல்களில் விறலியரின் சிறப்புகள் பெரிதும் வீயக்கத் தக்கதாக உள்ளது. வஞ்சி மாநகரத்தையும் சோழன் நலங்கிள்ளி ஆட்சி செய்து கொண்டிருக்கிறான். நம் சுற்றத்தாரின் சமையல் பாத்திரங்கள் நிறையுமாறு, நெடிய கொடியில் பூவாத வஞ்சி ஆகிய வஞ்சி மாநகரத்தையும் சோழன் நலங்கிள்ளி தருவான். வண்ணக் கலவை பூசிய வளைந்த முன்கையும், மூங்கில் போன்ற தோளும், ஒளிபொருந்திய நெற்றியும் உடைய விறலியர் விற்கும் பூவிற்கு விலையாக மாடங்கள் நிறைந்த மதுரையையும் தருவான். பரிசிலரே வாருங்கள்; நாம் அனைவரும் அவனைப் பாடுவோம். என்பதனை,

**“வண்ணம் நீவிய வணங்குஇறைப்**

**பணைத்தோள் ஒண்ணுதல் விறலியர்**

**பூவிலை பெறுக என மாட மதுரையும்**

**தருகுவன்; எல்லாம் பாடுகம் வம்மினோ**

**பரிசில் மாக்கள்”**[14] (புறம்:32 3-7)

என்ற வரிகளில் விறலியர்கள் தன் கலைத்திறன் மூலம் நாட்டை பெறம் வல்லமை வாய்ந்தவர் களாக இருந்தது புலனாகிறது.

### பெண் கலைஞர்களின் சமூக மதிப்பு

தமிழ் சமூகத்தில் கலைகளின் மேல் அதிக நாட்டமும், மதிப்பும் கொண்டிருந்தனர். கலையின் மீதான மதிப்பானது சமூகத்தில் எவ்வாறு கடைப்பிடிக்கப்பட்டது என்பதற்கு புறநானூற்றில் கபிலர் எடுத்துரைக்கும் பாடல் மிக சான்றாக உள்ளது. மூவேந்தர்களும் பாரியின் பரம்பு மலையை அடைய முற்பட்டு தோல்வியுற்ற பொழுது, நீங்கள் ஒன்று கூடிப் பறம்பு நாட்டை முற்றுகையிட்டாலும் பாரியை வெல்வது அரிது. பறம்பு நாடு வளமானது. அது

உழவர்கள் உழாமலேயே பலவித உணவுப் பொருள்களை அளிக்கும் நாடு. பறம்பு மலையோ வானத்தைப் போல் பெரியது. அதிலுள்ள சுனைகள் வானத்திலுள்ள விண்மீன்கள் போல் காட்சி அளிப்பவை. உங்கள் முயற்சியாலும், படை வலிமையாலும் பறம்பினைக் கொள்வது இயலாத செயல். அதை அடையும் வழி எனக்குத் தெரியும். நீங்கள் பாணர்களைப் போல உங்கள் விறலியரோடு சென்று பாடலும் ஆடலும் செய்தால், பாரி தன் நாட்டையும் மலையையும் உங்களிக்கு அளிப்பான் என்பதை,

**"அளிதோ தானே, பாரியது பறம்பே;**
**நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்**
**உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே;**
**ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே;**
**இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே;**
**மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே;**
**நான்கே, அணிநிற ஒரி பாய்தலின் மீதுஅழிந்து**
**திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே.**
**வான்கண் அற்றுஅவன் மலையே;**
**வானத்து மீன்கண் அற்றுஅதன் சுனையே; ஆங்கு**
**மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்**
**புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்**
**தாளிற் கொள்ளலிர்; வாளிற் றாரலன்;**
**யான்அறி குவன்அது கொள்ளு மாறே;**
**15 சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,**
**விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர,**
**ஆடினிர் பாடினிர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்குஈ யும்மே"**[15]

(புறம் : பா.எண்- 109)

என்னும் வரிகளில் விரலியர் பாடும் நடனத்திற்கு பாரி தனது நாட்டையே கொடுப்பான் என்ற செய்தி புலப்படுகிறது. மேலும் பாரி நாட்டை விரலியர்களுக்கு அவர்கள் கலைகளால் கொடுக்கிறான் என்பதை கபிலர் கூறியது மட்டுமின்றி, மூவேந்த மன்னர்களுக்கு இணை யாக விரல்களின் செயல்பாடுகளை சுட்டிக்காட்டி இருக்கிறார். மூவேந்தர்களை கலைஞர்களாக மாறினால் தான் நாட்டை பிடிக்க முடியும் என்பதையும் இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

விறலியர்களின் நடனத்திற்கு இணையாக நாட்டை கொடுக்கும் பாரியும், அதனை அவர்களைப் போலவே நடனமாடி பெறுங்கள் என்று கபிலர் சொன்ன விதத்தையும், இங்கு ஒப்பு நோக்கும் பொழுது விறலியர்களின் நடனம் பண்டைய காலங்களில் மிகச்சிறந்த ஒரு உயரிய நிலையைப் பெற்றுள்ளது என்பது புலனாகிறது.

**முடிவுரை**

இவ்வாறு விறலியர்கள், பாடினியார், என புறநானூற்றில் பல பெண் கலைஞர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் தங்களின் திறன்களை வெளிப்படுத்தி கலை உணர்வை மேம்படுத்தி பல பரிசுகளை பெற்றுள்ளனர். மன்னர்களுடன் ஒப்பிட்டு அவர்கள் கலைத்திறனையும் சுட்டி உள்ளதையும் காணமுடிகிறது. மேலும் பெண் கலைஞர்களின் திறன்களுக்கு நாடு, நகரம், கிராமம் என பல நிலங்களையும், தங்கம், வெள்ளி, பொன்கழஞ்சி என பல பொருள்களை யும் அவர்கள் தங்கள் கலைகளுக்கு பரிசாக பெற்ற செய்திகளை புறநானூற்றில் பல இடங்களில் காணமுடிகிறது. சங்க இலக்கியங்கள் பாலின பாகுபாடு எதுவும் இன்றி, பெண் கலைஞர்கள் உயர் நிலையில் இருந்ததை புறநானூற்று பாடல்களின் வழி அறிய முடிகிறது.

**துணைமை நூல்கள்**

1. புறநானூறு, முனைவர்.கு.வெ பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
2. தொல்காப்பியம், முனைவர் ச.திருஞானசம்மந்தம், கதிர் பதிப்பகம், திருவையாறு, இரண்டாம் பதிப்பு - 2010
3. பிங்கல நிகண்டு, பிங்கல முனிவர், பதிப்பாளர், மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை - 11 பதிப்பு ஆண்டு - 1917
4. சங்க இலக்கியத்தில் கலையும் கலை, கோட்பாடும. முனைவர்.கு.வெ பாலசுப்பிரமணியன், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சி.பி.டி. வளாகம், தரமணி, சென்னை - 60013
5. சங்க கால மகளிர் வாழ்வியல் - முனைவர் மு. திலகவதி, இறையருள் பதிப்பகம், 2001, The University of Michigan, 16 May 2008
6. தமிழ்ப்பாணர் வாழ்வும் வரலாறும், தேவநேயப் பாவாணர், பண்ணன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 1973
7. பதிற்றுப்பத்து- புலியூர் கேசிகன், பாரி நிலையம், 90, பிராட்வே-சென்னை-600108, முதல் பதிப்பு -1974, மறுபதிப்பு - 2004
8. மதுரைக்காஞ்சி - அ. செல்வராசு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050, முதல் பதிப்பு - ஏப்ரல் 2024